# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 5: மேலான பலி

**ஆதியாகமம் 22:1-19**

### நடந்த கதை . . .

சாயங்கால வேளை. தேவன் பேசினது ஆபிரகாமுக்கு நன்றாகவே கேட்டது. "உன் புத்திரனும் உன் ஏக சுதனும் உன் நேச குமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு" என்றார். ஆதியாகமம் 22:2.

அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிவதிலுள்ள விளைவுகளை எண்ணி, ஆபிரகாம் நடுங்கினார். ஈசாக்கின்மூலம் ஆபிரகாம் ஒரு வாக்குத்தத்த தேசத்தின் தகப்பனாகப் போவதாக, தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். தனக்கும் சாராளுக்கும் பிறந்த அந்த அற்புதக்குமாரனை வைத்தே தன் எதிர்பார்ப்புகளும் ஆசைகளும் நிறைவேறப்போவதாக ஆபிரகாம் நினைத்திருந்தார். இப்படி ஒன்றைச் செய்யும்படி தேவன் ஏன் சொல்கிறாரென்று ஆபிரகாமுக்குப் புரியவில்லை; குழப்பமாக இருந்தாலும் தன் பரலோகப் பிதாவை நம்ப அவர் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.



எனவே, வாலிபனான ஈசாக்கோடும், இரண்டு வேலைக்காரர்களோடும் மூன்று நாள் பயணமாக மோரியா மலைக்குப் புறப்பட்டார்கள். பலியிடப்போகும் மலையை நெருங்கியதும், தானும் தன் குமாரனாகிய ஈசாக்கும் திரும்பி வரும்வரை காத்திருக்குமாறு, வேலைக்காரர்களிடம் சொன்னார். கட்டைகளை ஈசாக்கின் முதுகில் வைத்தார்; இருவரும் மலையின்மேல் ஏறத்துவங்கினார்கள்.

ஏதோ பிரச்சனை என நினைத்த ஈசாக்கு, 'இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?' என்று கேட்டான். உடனே ஆபிரகாம், "மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்" என்றார். மலைமேல் சென்றதும், அங்கு வந்ததற்கான காரணத்தைக் கண்ணீரோடு ஆபிரகாம் எடுத்துக்கூறினார். தேவ கட்டளைக்கு ஈசாக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தார். கடைசியாகத் தன் மகனைக் கட்டி, பலிபீடக் கல்லின்மேல் படுக்கவைத்தார். ஆபிரகாம் வெட்டுவதற்குக் கத்தியை ஓங்கினார்; அப்போது ஒரு தூதன் அவரைத் தடுத்து நிறுத்தினான்; அருகில் ஒரு புதரில் சிக்கியிருந்த ஆட்டுக்கடாவைப் பலியிடும்படிக் கூறினான்.

மனதைத் தொடுகிற ஒரு சம்பவம் இது. ஒரு தகப்பன் தன் மகனைப் பலிகொடுக்கிற வேதனையான தீர்மானத்தைச் செய்ய வேண்டியிருந்தது, அது முதன்முறை அல்ல.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. ஈசாக்குக்குப் பதிலாகப் பலியிடப்பட்ட மிருகம் யாரைச் சுட்டிக்காட்டியது?**

**யோவான் 1:29.** *மறுநாளிலே யோவான் ____________ தன்னிடத்தில் வரக்கண்டு; இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ________ ________ என்றான்*

**2. இயேசு ஏன் கட்டாயமாக மரிக்கவேண்டியிருந்தது?**

**ரோமர் 3:23.** ____________ *பாவஞ்செய்து,*

**ரோமர் 6:23.** *பாவத்தின் சம்பளம்* ____________.

**எபிரெயர் 9:22.** ____________ *சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.*

**1கொரிந்தியர் 15:3.** *கிறிஸ்துவானவர் ...* ______ ____________ *மரித்(தார்).*

**1பேதுரு 3:18.** *கிறிஸ்துவும் ...* ____________________ *பதிலாக* ____________________ *பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார்.*

**குறிப்பு:** வேதாகமம் விலைமதிப்பற்றது; ஏனென்றால், பாவமானது உலகத்தில் நுழைந்தவிதமும், இறுதியில் அது அகற்றப்படப்போகும்விதமும் அதில் சொல்லப்பட்டுள்ளது. பாவம் எனும் கொடிய நோயை தேவனால் சகித்துக்கொள்ளமுடியாது. பாவத்தின் சம்பளம் மரணம். வேதனை என்னவென்றால், ஆதாம்–ஏவாள் பாவஞ்செய்தபோது, இந்த மரணநோய் மனித இனம் முழுவதையும் பீடித்தது. தேவ பிரமாணம் மாறாதது; அதை மீறுவதால் வரும் தண்டனையும் மாற்றமுடியாதது. எனவே, மனித இனம் முழுவதுமே மரணத்திற்கு ஆளானது. ஆனால், தன் சிருஷ்டிகளை அப்படியே விட்டுவிட்டு தேவன் சென்றுவிடவில்லை. எனவே, நம்புவதற்கரிய ஓர் அன்பின் தீர்மானத்தைச் செய்தார். உங்களுக்காகவும் எனக்காகவும் மரிக்கும்படி தம்முடைய குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பத் தீர்மானித்தார். அப்படியே அனுப்பினார். நம் பாவங்களும் நம் மரணதண்டனையும் அவர்மேல் விழுந்தன; நாம் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

**3. இரட்சிப்பின் மாபெரும் திட்டத்தின் பெயர் என்ன?**

**வெளிப்படுத்தல் 14:6.** *அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய* ____________ *உடையவனாயிருந்(தான்).*

**குறிப்பு:** தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் 'சுவிசேஷம்' எனப்படுகிறது சுவிசேஷம் என்றால் நற்செய்தி. மக்களுக்கு அறிவிக்கப்பட்ட செய்திகளிலேயே மிகவும் அறபுதமானது அது. நம் மரணதண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டார்; நம் குற்றப்பழி அகற்றப்பட்டது.

**4. இத்துணை ஆச்சரியமான ஓர் தியாகத்தை ஆண்டவர் நமக்காக ஏன் செய்தார்?**

**யோவான் 3:16.** *தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை ...* ____________, *இவ்வளவாய் உலகத்தில்* ____________ *கூர்ந்தார்.*

**குறிப்பு:** பெற்றோர் தங்கள் பிள்ளைமேல் காட்டும் அன்புதான் பூமியிலேயே நெருங்கிய பந்தமாக இருக்கமுடியும். பிதாவாகிய தேவன் தம் குமாரனாகிய இயேசுவை நமக்காகப் பாடுபடவும், மரிக்கவும் முழுமனதுடன் அனுப்பிவைத்தார். நம் ஒவ்வொருவர்மேலும் அவர் எவ்வளவு அதிக அன்புவைத்திருக்கிறார் என்பது தெளிவாக விளங்கியது.

**5. இயேசுவின் தியாக மரணத்தால் எனக்கு நன்மை விளையும்படி நான் என்ன செய்யவேண்டும்?**

**அப்போஸ்தலர் 16:31.** "*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை* ____________, *அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.*"





**யோவான் 1:12.** *அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும்* ____________ ____________, *அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.*

**குறிப்பு:** இரட்சிப்பை ஓர் ஈவாக இயேசு கொடுக்கிறார். ரோமர் 6:23. அது உண்மை என்று நம்புவதும், விசுவாசத்தால் அந்த ஈவைப் பெற்றுக்கொள்வதும்தான் நம் வேலை.

**6. அப்படியானால் நான் எவ்வாறு மன்னிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுகிறேன்?**

**அப்போஸ்தலர் 3:20.** *உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்* ____________.

**1யோவான் 1:9.** *நம்முடைய பாவங்களை நாம்* ____________, *பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச்* ____________ *அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

**குறிப்பு:** மனமாற்றத்தை வாயால் அறிக்கை செய்வதுதான் பாவ அறிக்கை. பாவத்திற்காக வருந்துவதும், அதை விட்டு விலகுவதும்தான் மெய்யான மனமாற்றம். நீதி 28:13.

**7. இந்த அற்புத மனமாற்றத்தின் அனுபவம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

**யோவான் 3:7.** *நீங்கள் மறுபடியும்* ____________ ____________.

**குறிப்பு:** மகிமையான இந்த அனுபவம்தான் மறுபிறப்பு; ஏனெனில், அந்தக் கணத்தில், நம் கடந்தகால வாழ்க்கை ஒழிந்துபோயிருக்கும். புதிதாய்ப் பிறந்த குழந்தையைப்போல ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கிறோம். நம்மேல் எந்தக் குற்றப்பதிவும் இல்லாமல், புதிதாய் நம் வாழ்க்கையைத் துவங்கும் ஓர் அற்புத அனுபவம் அது.

**8. மறுபடியும் பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனின் உள்ளத்திலும் வருவது யார்?**

**யோவான் 14:17.** *சத்திய* ____________*யானவர் ... உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.*

**குறிப்பு:** ஒரு கிறில்தவனுக்குள் கிறிஸ்துதாமே தம்முடைய பரிசுத்த ஆவியானவர்மூலம் வாசஞ்செய்கிறார்.

**9. பரிசுத்த ஆவியானவர்மூலம் கிறிஸ்து எனக்குள் வாசஞ்செய்தால், நான் என்ன செய்வேன்?**

**பிலிப்பியர் 2:13.** *தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும்* ____________ *உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.*

**குறிப்பு:** நான் அவருடைய சித்தத்தின்படி செயல்பட விரும்புகிறேன்; அதன்படி நடப்பதற்கான வல்லமையை அவர் எனக்குத் தருகிறார்.

**10. என்னுடைய மறுபிறப்பின் அனுபவம் வெற்றிகரமாக இருக்குமென்று நான் ஏன் நம்பலாம்?**

**பிலிப்பியர் 1:5.** *உங்களில் நற்கிரியையைத்* ____________ *அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார்.*

**குறிப்பு:** நான் நம்பிக்கையோடிருக்கிறேன்: ஏனென்றால், கிறிஸ்துதாமே தம்முடைய மகா வல்லமையால் எனக்காக அதைச் செய்துமுடிப்பதாக வாக்குரைக்கிறார். என்னுடைய பலத்தை வைத்து அல்ல, இயேசுவின் பலத்தை வைத்துத்தான் இரட்சிப்பு இருக்கிறது.

## 11. சிலர் தங்கள் கிறிஸ்தவ அனுபவத்தில் தோற்றுப்போவது ஏன்?

**ஏசாயா 53:6.** நாமெல்லாரும் … அவனவன் தன்தன் ____________________ போனோம்.

**2பேதுரு 3:2.** பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற ____________________ அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவுகூரு(ங்கள்).

**குறிப்பு:** இயேசுவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டும், அவரை ஆண்டவராக அல்லது தங்கள் வாழ்வின் 'அரசராக' ஏற்றுக் கொள்ளாததால்தான், பெரும்பாலான கிறிஸ்தவ வாழ்க்கை தோல்வியில் முடிந்துபோகிறது. இயேசுவை நம் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்போது, நம் வாழ்க்கையை அவருக்கு நேராகத் திருப்புகிறோம். நம் வாழ்க்கைக் கப்பலின் சுக்கானிலிருந்து நம் கரங்களை எடுத்துவிட்டு, அவர் அதை ஓட்டிச்செல்லும்படி கேட்கிறோம். ('ஒருமுறை இரட்சிக்கப்பட்டால், எப்போதும் இரட்சிப்பா?') எனும் சிறப்பு ஆராய்ச்சிப் பகுதியை வாசியுங்கள்.

## 12. இயேசு என்னை ஏற்றுக்கொள்வதையும், நான் அவருடைய பிள்ளை என்பதையும் நான் எவ்வாறு அறியலாம்?

**தீத்து 1:3.** பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக்குறித்து ____________________.

**மத்தேயு 7:7.** கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் ____________________.

**குறிப்பு:** நம்மை ஏற்றுக்கொள்ளுமாறு இயேசுவிடம் கேட்டால் நிச்சயம் ஏற்றுக்கொள்வார்; அவர் பொய்சொல்ல மாட்டார். நம்மை ஏற்றுக்கொள்வதாக வாக்குரைத்திருக்கிறார்; நம்மை ஏற்றுக் கொள்கிறார். நாம் வித்தியாசமானவர்களாக மாறினதற்காக அல்ல, அவர் வாக்குரைத்துள்ளதால் அப்படிச் செய்வார்.

## 13. மெய்யான மனமாற்றம் ஒருவரின் வாழ்க்கையை எவ்வாறு மாற்றும்?

**யோவான் 13:35.** நீங்கள் ஒருவரிலொருவர் ____________________, அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.

**2கொரிந்தியர் 5:17.** ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் __________சிருஷ்டியாயிருக்கிறான்.

**1யோவான் 3:22.** அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் ____________________.

**ரோமர் 12:2.** நீங்கள் இந்தப் ____________________ ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான ______________ இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே ____________________.

**எபேசியர் 6:18.** எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ____________________.

## 14. கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்குள்ள அற்புத வாக்குத்தத்தங்கள் யாவை?

**பிலிப்பியர் 4:13.** என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே ____________________ செய்ய எனக்குப் பெலனுண்டு.

**பிலிப்பியர் 4:19.** என் தேவன் … உங்கள் ____________________ … நிறைவாக்குவார்.

**மாற்கு 10:27.** தேவனாலே எல்லாம் ______________ என்றார்.

**யோவான் 15:11.** உங்கள் ____________________ நிறைவாயிருக்கும்.

**யோவான் 10:10.** அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்(கும்), அது ____________________(படும்).

**எபிரெயர் 13:5.** நான் உன்னைவிட்டு ____________________; உன்னைக் கைவிடுவதுமில்லை.

**எபிரெயர் 13:6.** நான் ____________________, மனுஷன் எனக்கு என்னசெய்வான்.



**யோவான் 14:27.** என்னுடைய ____________________ உங்களுக்குக் கொடுக்கிறேன்.

**குறிப்பு:** தேவன் தம் மக்களுக்குக் கீழுள்ள எட்டு அற்புத வாக்குத்தத்தங்களைத் தருகிறார்.

- இயேசுவின் மூலம் நாம் எதையும் செய்துமுடிக்கலாம்.
- நம் தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும்.
- நம்மால் செய்யமுடியாததென்று எதுவும் இருக்காது.
- நம் சந்தோஷம் நிறைவாயிருக்கும்.
- நாம் பரிபூரண வாழ்க்கையை வாழ்வோம்.
- தேவன் நம்மைவிட்டு விலகமாட்டார்; நம்மைக் கைவிடமாட்டார்.
- மனுஷன் நமக்கு என்ன செய்வான் என்று எது குறித்தும் நாம் பயப்பட வேண்டியதில்லை.
- ஆண்டவர் தம்முடைய பரிபூரண சமாதானத்தை நமக்குத் தருவார்.

ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்! இதைவிட மிகச்சிறந்த வாழ்க்கை வேறென்ன இருக்கமுடியும்?

# நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

உங்களை இரட்சிக்க இயேசு வகுத்துள்ள திட்டத்தை இப்போதே ஏற்றுக்கொள்வீர்களா? ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருந்தால் அதைப் புதுப்பிப்பீர்களா?

**பதில்:** ____________________

# துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

### ஒரு முறை இரட்சிப்பு எப்போதும் இரட்சிப்பா?

ஒருவர் கிறிஸ்துவைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டுவிட்டால் அவர் இரட்சிப்பை இழந்துபோகவே வாய்ப்பில்லையா? இந்தக் கேள்விக்கான பதில் வேதாகமத்தில்மாத்திரமே உள்ளது. 'அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; … ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; … சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இல்லை' என்று வேதாகமம் தானே சொல்கிறது. எபிரெயர் 10:23, 24, 26.

நாம் ஒரு கிறிஸ்தவரானதும் நம் கடமை முடிந்துவிட்டதாக வேதாகமம் சொல்லவே இல்லை. தேவவார்த்தை தெளிவாகச் சொல்கிறது. 'கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாய் இருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.' 2பேதுரு 2:20-22.

கிறிஸ்தவ மார்க்கம் ஒருமுறை தீர்மானத்தைச் சார்ந்ததல்ல. நாம் தொடர்ந்து அவருக்குள் நிலைத்திருக்கவேண்டும் என்கிற நிபந்தனையின் அடிப்படையில் தான் நம் இரட்சிப்பு அமைந்திருப்பதாக இயேசு கூறினார். யோவான் 15:4. அப்போஸ்தலனாகிய பவுல், "நான் அனுதினமும் சாகிறேன்" என்று சொன்னார். 1கொரி 15:31. அதாவது, சுயத்தை மறுத்து, இயேசுவைப் பின்பற்ற ஒவ்வொரு



நாளும் அவர் தீர்மானித்தார். 'ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்' என்று ஆண்டவர்தாமே கூறினார். லூக்கா 9:23.

சத்தியத்தை வேண்டாமென்று மறுத்தபிறகும் நாம் இரட்சிக்கப்படமுடியுமென்று வேதாகமத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. 'நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி செய்து, துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில், அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை; அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான்' என்று எசேக்கியேல் 18:24 சொல்கிறது. 'தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.' என்று பவுலும் நினைப்பூட்டுகிறார். 1கொரிந்தியர் 10:12.

'நடக்கவேண்டிய விதத்தில்' நடக்காமலே, 'பேசவேண்டியதைப் பேசலாம்' என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இயேசு, 'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்' என்று சொன்னார். மத்தேயு 7:21-23.

உண்மையான கிறிஸ்தவனுக்கு எப்போதும் இருந்துவரும் போராட்டத்தை 'பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்' என்று பவுல் கூறுகிறார். 1 கொரி 9:24,25,27.

ஒருமுறை நாம் இரட்சிக்கப்பட்டால், இரட்சிப்பை இழந்துபோகவே வாய்ப்பில்லை என்று நினைப்பது, தெரிந்தெடுக்கும் உரிமையை தேவன் நம்மிடமிருந்து பறித்துவிட்டார் என்றாகிவிடும். மாறாக, தேவன் நம்முடைய வாழ்க்கையில் துவங்கின கிரியையை வெற்றிகரமாக முடிக்க வல்லவராக இருக்கிறார் என்ற நிச்சயத்தை உடையவர்களாக நாம் வாழவேண்டுமென்று அவர் விரும்புகிறார். 'உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார்' பிலிப்பியர் 1:6.

நாம் தொடர்ந்து அவரைப் பின்பற்றினால், அவர் தொடர்ந்து நம்மை நடத்துவார். நாம் மனப்பூர்வமாக நம் கரத்தை அவரிடம் ஒப்படைத்தால், அவர் அதை விடவேமாட்டார். இதை நாம் உறுதியாக நம்பலாம். 'முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.' மத்தேயு 24:13.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com